செ.வெ.எண்: 701

# செய்தி வெளியீடு – 10.10.2009

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்கள் 5 ஆயிரத்து 487 பேருக்கு 1 கோடியே 93 இலட்சம் ரூபாய் போனஸ்

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்களில் மாதம் 9300–34800 ஊதியத்துடன், ரூபாய் 4300 தர ஊதியம் பெறும் பதவிகளில் பணிபுரியும் "சி" மற்றும் "டி" பிரிவுப் பணியாளர்களுக்குப் போனஸ் சட்டத்தின்படி சம்பள உச்சவரம்பிற்கு விலக்களித்து 2008–2009ஆம் ஆண்டிற்கான போனஸ் வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணியாளர்களுக்கு 8.33 சதவிகிதம் போனஸ் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் 5 ஆயிரத்து 487 பணியாளர்களுக்கு மொத்தம் 1 கோடியே 93 இலட்ச ரூபாய் போனஸ் வழங்கப்படும்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9